உ

குருபாதம்

# சங்கடஹர சதுர்த்தி



அன்பே சிவம்

www.sivabhogam.com

உ

குருபாதம்

# விநாயகர்

## "விநாயகர்" என்ற சொல்லின் பொருள் யாது?

தமக்குத்தலைவர் இல்லாதவர், ஒப்புயர்வற்றவர் என்பது பொருளாம். சிறந்த, நாயகர், தலைவர், நடத்துவோர் என்பதும் பொருளாம்.

## விநாயகர் திருவுருவத்தின் அமைப்பு யாது?

யானை முகம், ஒடிந்த கொம்பு, பருத்த தொந்தி, இடக்கையில் மோதகம், மூஷிக வாகனம் இவற்றுடன் இருந்த கோலத்தில் விளங்குவதே இத்திருவுருவத்தின் அமைப்பாம்.

## இவர் பரமசிவன்றன் மூத்தகுமாரர் என்று கூறப்படு வானேன்?

எல்லாம் வல்ல பரம்பொருளாகிய கடவுளிடமிருந்து முதலாவது உண்டாகிய படைப்பு "ஓம்" எனும் பிரணவ நாதமேயாகும். அந்த ஓம் என்னும் ஒலியின் வரிவடிவமே விநாயகரின் திருவுருவமாம். இறைவனிடமிருந்து முதற்கண் தோன்றியது ஓங்காரப் பிரணவமே யாகையால் இவர் "பிரணவகணபதி" யென்றும், "ஓங்கார உருவன்" என்றும் பரமசிவனது மூத்தப்பிள்ளை என்றும் அழைக்கப்படுகிறார்.

## ஓங்கார ஒலியின் வரிவடிவமே விநாயகர் என்பதை எவ்வாறு விளக்கலாம்?

ஒடிந்த கொம்பு "ஓ" என்ற எழுத்தின் சுழி இருக்கு மிடம். இவ்வெழுத்து இங்கிருந்து தொடங்கி வலக்கை வழியாகக் கிரீடத்தைச்சுற்றி, இடக்கைப் பாசம் வரையில் வந்து திரும்பி வளைந்து, நெற்றிப் பொட்டு வரையிற் போய்த் துதிக்கை வழியாகக் கீழிடக்கை வந்து கால்வரை இறங்கும்.

இடக்கையும் மோதகமும் "ம்" என்பதைக் குறிக் கின்றன. ஆகையால் விநாயகர் திருவுருவம் ஓங்காரவடிவ மேயாகும்.

உ

குருபாதம்

**இந்த விக்கிரகத்துக்கு யானைமுகம் அமைக்கப் பட்டதேன்?**

யானையின் குரலொலி உலகில் உண்டாகும் மற்ற எல்லா ஒலிகளைக் காட்டிலும் ஓங்காரப் பிரணவ ஒலியை நனகு ஒலிப்பதால் யானைமுகம் இவருக்கு அமைக்கப் பட்டது.

**எல்லா வழிபாடுகளிலும் விநாயகர் வழிபாடு முதலாவதாகச் செய்வது எதற்கு?**

பிரணவ ஒலி எல்லாவற்றிற்கும் முதலாவதாக விளங்குவது; ஆகையால் விநாயகரும் முதலாவதாக வைத்துப் பூஜிக்கப்படுகிறார்.

**அவர் பெரிய வயிறு உடையவராய் இருப்பது எதைக் குறிக்கிறது?**

ஓங்காரத்துள் எல்லா அண்டங்களும் அடங்கிக் கிடக்கின்றன என்பதைக் காட்டுகிறது.

**இவருக்கு மூஞ்சூறு வாஹனம் ஆனது ஏன்?**

விநாயகர் ஓங்காரப் பிரணவரூபி என்றபோது அது மகா பெரிய அண்டங்களையும் தனதுட்கொண்ட பிர்ம்மாண்ட வடிவமென நமக்குப்படுகிறது. அவருக்கு வாஹனம் மூஞ்சூறு என்றபோது மூஞ்சூறு தாங்கத்தக்க சிற்றுருவினர் என்பதும் தெரிகிறது. ஆதலால் கடவுள் அணுவுக்கணுவாயும், மகத்துக்கு மகத்தாயும் இருக்கிறார் என்பதை உணர்த்த மூஞ்சூறு வாகனமாயிற்று.

ஆகவே, கடவுளிடமிருந்து முதலாவது உண்டாகிய ஓங்காரப் பிரணவ ஒலியின் உருவமே விநாயகர் திருவுருவம் என்பது பெறப்படும்.

அன்பே சிவம்
www.sivabhogam.com